என்று ஏற்றுக்கொண்ட மாத்தயா, ரஜாகரனுக்கு எவ்வித இம்சையும் செய்யப்படமாட்டாதென உறுதியளித்தார். அத்தகைய வாக்குறுதி பகிரங்கமாகச் செய்யப்பட வேண்டுமென இராஜ தந்திரீதியாக மாணவர்கள் கேட்டுக் கொண்டனர். மாத்தயா அதை ஏற்றுக்கொண்டார். அதன் பின்னர் ஒருநாள் மாத்தயா கைலாசபதி கலையரங்கில் நடந்த கூட்டத்தில், சமூகமளித்து அந்த உறுதிமொழியை அளித்தார். மாத்தயா தனது கூற்றிலே ரஜாகரன் "கிரிமினல்" இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்தாரா என விசாரணை செய்யப்பட்டாரெனக் கூறினார். கிரிமினல்கள் வேலைகளில் அசகாய சூரர்களான விடுதலைப்புலிகள் ஏனைய இயக்கங்களை கிரிமினல் இயக்கங்களென முத்திரை குத்துவது வேடிக்கையானது. ரஜாகரன் கைலாசபதி கலையரங்கிலே பிரசன்னமாயிருந்து வேண்டுகோளின்பேரில் மேடையில் தோன்றியமை எதிர்பாராத நிகழ்வாயிருந்தது.

விடுதலைப்புலிகள் இயக்கம் அங்கிருந்து வெளிநடப்புச் செய்தது. ரஜாகரன் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தனக்குச் செய்த சித்திரவதைகள் உட்படத் தனது அனுபவங்களை விபரமாக எடுத்துக் கூறினார். அவர் வெளியிட்ட முக்கியமான தகவல்களில் ஒன்று, மன்னார் மாவட்டத்தில் இலுப்பைக் கடவையைச் சேர்ந்த த.வி.ஐ.முவின் முக்கிய பிரமுகரான திரு.கைலாசபிள்ளை தெல்லிப்பளையில் ஒரு முகாமில் தன்னுடன் சிறைவைக்கப்பட்டிருந்தமையாகும். சில நாட்களுக்கு முன்னர் 'ஈழமுரசு' பத்திரிகை தனது முக்கிய செய்தியில் திரு.கைலாசபிள்ளை பற்றிக் குறிப்பிட்டு அவரது புகைப்படத்தையும் வெளியிட்டிருந்தது. ஒரு பேட்டியில் அவர், த.வி.ஐ.மு. இனியும் தேவையில்லையெனக் கூறி, ஆயுதப் போராட்ட இளைஞர்களைப் புகழ்ந்திருந்தார். காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதியில், த.வி.ஐ.முவின் தலைவரான அ.அமிர்தலிங்கத்திற்கு மிகவும் நெருக்கமானவரான ஒரு சட்டத்தரணி இதே கருத்தையே வெளியிட்டிருந்தார். இலங்கையில் தேர்தல் அரசியலில் இத்தகைய வழிமுறைகளை அன்னியமானதெனக் கூறமுடியாது. அளவில் தான் வித்தியாசம். முன்பு லஞ்சம் இருந்தது. அந்த இடத்தில் இப்போது அச்சம் உட்கார்ந்திருக்கிறது.

இந்திய சமாதானப்படை எல்லா ஆயுதப் போராட்டக்குழுக்களும் பாதுகாப்புக்கு உரித்துடையவர்களென உறுதியளித்தது. மன்னாரில் விடுதலைப்புலிகள் இயக்கம், இந்திய சமாதானப்படையின் பாதுகாப்பை நாடியது. ஈ.என்.டி.எல்.எவ். ராஜனின் தலைமையின்கீழ் யாழ்ப்பாணத்திலே இந்திய சமாதானப்படையின் பாதுகாப்புடன் தலைகாட்டியது. அது பல்கலைக் கழகத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் உரையாற்றியது. கடற்கரைவீதியில் அது தனக்கு ஒரு அலுவலகத்தை அமைக்க முயற்சித்தது. விடுதலைப்புலிகள் இயக்கத்தால் தூண்டப்பட்ட ஒரு கூட்டம், அலுவலகம் திறக்கப்படவிருந்த வீட்டுக்கு முன்னால் அமர்ந்து கோசங்களைக் கத்தியதுடன், கற்களையும் வீசினர். ஒட்டி நின்று பார்க்கச் சென்ற ஒரு ஈ.என்.டி.எல்.எவ் உறுப்பினர் சனங்களால் பலமாகத் தாக்கப்பட்டார். அவரது தோழர்களில் ஒருவர், அங்கு நின்ற இந்திய சமாதானப் படையிடம் வேண்டுகோள் விடுத்து அவர்கள் அதற்கு உடனடியாக செயற்படாததினால், அவர்களில் ஒருவரிடமிருந்த துப்பாக்கியைப் பறித்து, தாமே ஆகாயத்தை



நோக்கி வெடி வைத்தார். அங்கு திரண்டிருந்த கூட்டம் கலைந்து சென்றது. பெரும்பாலும் சுதந்திரமற்ற யாழ்ப்பாணப் பத்திரிகைகள் அது ஈ.என்.டி.எல்.எவ்வை விரும்பாத மக்களின் செயலென எழுதின. மன்னார் மாவட்டத்தில் இயக்கங்களுக்கிடையிலான மோதலில் மூன்று விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் கொல்லப்பட்டதாக முதல் அறிக்கை கூறியது. இன்னொரு நிகழ்ச்சியில், இந்தக் கொலைகளுக்குப் பழிவாங்கச் சென்ற ஆயுதந்தரித்த விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் சுற்றி வளைக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்களெனக் கூறப்பட்டது. ஆகஸ்ட் மாதத்தின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்திலே கவலைப்படக் கூடிய நிகழ்ச்சிகள் எதுவும் நடக்கவில்லை. ஆனால் வவுனியா, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில், ஆயுதப் போராட்டக் குழுக்களிடையே கொலைகளும், அதற்கு பதில் கொலைகளும் தொடங்கி விட்டன. ஆகஸ்ட் 31ம் திகதி கொழும்புக்கான புகையிரத சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன் நல்லவை நடக்கப் போகின்றதென்ற உணர்வு யாழ்ப்பாணத்தில் நிலவியது. யாழ்ப்பாணத்தில் வெளிவரும் தினசரித் தமிழ்ப்பத்திரிகையான 'உதயன்' நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட யாழ்ப்பாணம் – மட்டக்களப்பு புகையிரதப்பாதையை இந்திய அமைதிகாக்கும் படை திருத்தியமைப்பதாக அறிக்கை வெளியிட்டது. கிழக்குக் கடற்கரையோரம் உட்பட, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய தமிழ்ப் பிரதேசங்கள்' இணைக்கப்பட்டாலும், அவற்றினூடாகப் பயணஞ் செய்வது முன்பு சிரமமாயிருந்தது; இப்போது ஆபத்தானதாயிருந்தது. இதுவும் ஓரளவு மகிழ்ச்சிக்குரியதுதான். புகையிரத சேவை 18 மாதங்கள் நடைபெறாதிருந்த பின்னர், ஆகஸ்ட் 30ம் திகதி மாலை ஒரு புகையிரதம் பழுதுபார்க்கும் குழு யாழ்ப்பாணம் வந்தது. அது கச்சேரியடியிற் காணாமற் போன சிலிப்பர்க்கட்டைகளைப் போடுவதற்காகத் தரித்து நின்றது. மாட்சிமை தங்கிய மாமன்னரை வரவேற்பதுபோல அப்புகையிரதத்தை வரவேற்பதற்காக மகிழ்ச்சியடைந்த ஒரு கூட்டம் அங்கே கூடியது. சிலிப்பர்க் கட்டைகள் போடும் வேலை துரிதமாக நடந்து முடிந்தது. நிரந்தரப் புகையிரதப் பாதைகளின் பரீட்சகர் தனது கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, மகாராணியின் சுத்த ஆங்கிலத்தில் இல்லை என்றாலும் அவர்களுக்கேயுரிய பாணி ஆங்கிலத்தில் "தாமதமாகிறது, நாம் போவோம்" என்று கூறி, வேலையாட்களைப் புகையிரதத்துள் ஏறுமாறு சைகை காட்டினார். அறுநூறு யார் தொலைவிலுள்ள யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்துக்கு இலவசமாகப் பயணஞ் செய்யும் மகிழ்ச்சியில் அங்கு நின்ற சிறுவர்கள், புகையிரதம் நகரத் தொடங்கியதும் தொற்றி ஏறிக்கொண்டார்கள்.

பின்னர், யாழ்ப்பாணத்தில் விடயங்கள் நகர ஆரம்பமாயின. செப்ரெம்பர் முதலாந்திகதி, கொக்குவிலில், குளப்பிட்டிச் சந்தியில் காவலுக்கு நின்ற விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர், ஒரு வானில் வந்தவர்களால் தூக்கிச் செல்லப்பட்டு, தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார். தேவனின் திருச்சபை என்ற கிறிஸ்தவ மதப்பிரிவைச் சேர்ந்த நான்கு போதகர்கள் ஒரு வானில் பயணஞ் செய்து கொண்டிருந்தபோது உடுவில் சந்தியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அவர்களுள் இருவர் தெற்கிலிருந்து வந்த சிங்களப் போதகர்களாவர். இந்தக் கொலைகளுக்கான நோக்கம் தெளிவில்லை. ஆனால்